DISTRICT MUNSIF COURT, UTHAMAPALAYAM

Present : Thiru. A. Saravana Senthil Kumar, B.Com., B.L.,
District Munsif, Uthamapalayam.

**OS.No. 101/2022**

**(CNR.No: TNTH06-000153-2022)**

| | | | |
|---|---|---|---|
| Name | : மகேந்திரன் | Religion | : |
| Father's Name | : | Occupation | : |
| Caste | : | Place | : |
| Age | : | **PW1** | |

---

நாள் :29.08.2023

**முதல் விசாரணை**

1) நான் இந்த வழக்கில் வாதி. வாதி தரப்பில் 1 வது சாட்சியாவேன். நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். நான் சொன்ன விபரத்தின் அடிப்படையில் தான் நிரூபண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டது. அதைப்படித்துப் பார்த்து தான் கையொப்பம் போட்டேன். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணை சாட்சியமாக பதிவு செய்துகொள்ள வேண்டுகிறேன்.

2) 12.04.2083 கே.கே.எம் காதர்மைதீன் வகையறாக்கள் உத்தமபுரம் முஸ்லீம் சங்கத்திற்கு பதிந்து கொடுத்த கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(அது வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 18.11.2002 உத்தமபுரம் முஸ்லீம் சங்கம் காஜாமைதீனுக்கு பதிந்து கொடுத்த கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(அது வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 22.03.2004 ம் தேதி கே.காஜாமைதீன் பவளமணி, கருப்பாயிக்கு பதிந்து கொடுத்த கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(அது வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3) 06.06.2007 பவளமணி மற்றும் கருப்பாயி சேர்ந்து மாரியம்மாளுக்கு

பதிந்து கொடுத்த கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(அது வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 3.01.2014 ம் தேதி மாரியம்மாள் வாதிக்கு பதிந்து கொடுத்த கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(அது வா.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 23.01.2018 ம் தேதி வாதி கொடுத்த புகாருக்கு வழங்கப்பட்ட காவல்நிலையத்தில் கொடுத்த மனு இரசீது தாக்கல் செய்கிறேன். **(அது வா.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 02.09.2021 ம் தேதி பிரதிவாதிக்கு எதிராக மீண்டும் வாதி கொடுத்த புகாருக்கு காவல்நிலையத்தில் வழங்கப்பட்ட மனு இரசீது தாக்கல் செய்கிறேன். **(அது வா.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(ஒ.ம்) A. சரவணசெந்தில்குமார், B.Com., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.